### மெட்ரோ ரெயில் சேவைக்காக

# சேத்துப்பட்டு ஏரி, அடையாறு ஆற்றின் கீழே 70 அடியில் சுரங்கப்பாதை

## இறுதி கட்டத்தில் 1,700 இடங்களில் மண் ஆய்வுப்பணி

சென்னை, ஏப்.5–

சென்னையில் கூவம் ஆற்றை தொடர்ந்து சேத்துப்பட்டு ஏரி, அடையாறு ஆற்றுக்கு கீழே 70 அடி ஆழத்தில் 2 இடங்களில் மெட்ரோ ரெயில் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படுகிறது. 1,700 இடங்களில் மண் ஆய்வு பணிகள் நிறைவடையும் நிலையை எட்டி உள்ளது.

### சேத்துப்பட்டு ஏரி, அடையாறு

சென்னையில் 45 கிலோ மீட்டர் தூரம் கொண்ட முதல் மெட்ரோ ரெயில் திட்டத்துக்கான பணிகள் நிறைவடைந்து ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து சென்னையில் 2–வது கட்டமாக வடசென்னை மற்றும் தென்சென்னை பகுதியை இணைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் பாதை அமைப்பதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் நடந்து வருகிறது.

குறிப்பாக மாதவரம்–சிறுசேரி வழித்தட பாதையில் 52 கிலோ மீட்டர் தூர பணிகள் முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு ஆரம்ப கட்டப் பணிகள் தொடங்கி நடந்து வருகிறது. குறிப்பாக மண்பரிசோதனை பணிகள் நிறைவடையும் நிலையை எட்டி உள்ளது.

முதல் திட்டத்தில் கூவம் ஆற்றின் கீழே சுரங்கப்பாதை அமைத்தது போன்று, 2–வது திட்டத்திலும் சேத்துப்பட்டு ஏரி மற்றும் அடையாறு ஆற்றை கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது. இதனால் இந்த நீர்நிலைகளின் அடிப்பகுதியில் சுரங்கம் அமைப்பதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### மண் பரிசோதனை

சேத்துப்பட்டு ஏரி, அடையாறு ஆற்றுக்கு அடியில் 70 அடி ஆழத்தில் சுரங்கப்பாதை உருவாக்கப்பட உள்ளது. இதற்காக அடையாறு ஆற்றங்கரையோரம் மண் பரிசோதனை ஆய்வு பணிகள் நடந்து வருகிறது.

அதைதொடர்ந்து சுரங்கம் அமைக்கும் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் அல்லது வருகிற ஜனவரி மாதத்துக்குள் தொடங்கப்படுகிறது. இதற்கான டெண்டர் விடும் பணி ஜூன் மாதத்திற்குள் நடக்க உள்ளது.

### 2025–ம் ஆண்டு பணிகள் நிறைவு

இதற்காக சென்னையில் 1,700 இடங்களில் 25 முதல் 30 மீட்டர் இடைவெளியில் 25 மீட்டர் ஆழத்தில் இருந்து எடுக்கப்படும் மண் பரிசோதனைக்காக ஆய்வகங்களில் அனுப்பி சோதனை செய்யப்பட்டு வருகிறது.

இந்தப்பணி நிறைவடையும் நிலையை எட்டி உள்ளது. இந்தப்பணி நிறைவடைந்தவுடன் சுரங்கம் தோண்டும் பணி தொடங்க இருக்கிறது. குறிப்பாக அடையாறு ஜங்சன் மற்றும் அடையாறு டெப்போ பகுதிகளில் 8 முதல் 20 மீட்டர் ஆழத்தில் சுரங்கபாதை அமைக்கப்பட உள்ளது. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையையும், சேத்துப்பட்டு ரெயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் சேத்துப்பட்டு ஏரியின் கீழ் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. இந்தப்பணிகள் இந்த ஆண்டு இறுதி அல்லது 2020–ம் ஆண்டு ஜனவரியில் தொடங்க வாய்ப்பு உள்ளது. 2025–ம் ஆண்டுக்குள் இந்த இரட்டை வழித்தட சுரங்கப்பாதை பணிகள் நிறைவடையும்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.